# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1 இவ்வளவு பெரிதான இரட்சிப்பு 1

2. ஆவியின் அளவுகள் 7

3. பெண்கள் பகுதி 11

4. மனந்திரும்புவதின் அவசியம் 14

5. கண் பார்வை இழந்த ஒரு மனிதன் கண்டது என்ன? 18

6. எது போதிக்கப்பட வேண்டும் 24

7. தேவனை உங்களுக்குத் தெரியுமா? 25

# THIRUMARAI AASAAN

Editor : E.Z.S. RAJANAYAGAM
Honorary Editor J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 | DECEMBER 1994 | Issue - 12


## ஆசிரியவுரை

## "இவ்வளவு பெரிதான இரட்சிப்பு"

இந்தப் பெரிதான இரட்சிப்பைக் குறித்து எபிரேயர் நூலின் ஆசிரியர், தன்னுடைய நிருபத்தில் விளக்கியுள்ளார்.

"ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க,

முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்.

அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம். (எபிரேயர் 2 : 1 - 4)

எபிரேயருக்கு எழுதின நிருபம் யூதமார்க்கத்திலிருந்து, கிறிஸ்தவர்களானவர்களுக்கு கொடுக்கப்பட்டது. குறிப்பாக, தன்னுடைய எபிரேய சகோதரர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திலிருந்து பின்வாங்கி, மீண்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு சென்றுவிடாமல் தடுத்து நிறுத்த எழுதப்பட்டுள்ளது.

இந் நிருபத்தைக் கவனித்துப் படித்தால், அதற்கேற்ற வகையில் அறிவுரைகளும் - ஊக்கமும் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண முடியும்.

இந்நூலின் அடிப்படைக் கருத்து "மேலானது" என்பதாகும். அதாவது "கிறிஸ்து மேலானவர்" என்பது தான் இப்புத்தகம் முழுவதும் பரவிக் கிடக்கும் முக்கிய செய்தி. எப்படி மேலானவர் என்று சிலவற்றைக் கவனிப்போம்.

I) கிறிஸ்து, தேவதூதர்களைக் காட்டிலும் மேலானவர்; ஏனெனில், தேவதூதர்கள் அவரை ஆராதித்தார்கள்.

II) கிறிஸ்து மோசேயைக் காட்டிலும் மேலானவர்; ஏனெனில் மோசே அவரால் உண்டாக்கப்பட்டவர்.

III) கிறிஸ்து, ஆரோனின் ஆசாரியத்துவமுறையைக் காட்டிலும் மேலானவர்; ஏனெனில், இவர் ஒரே தரம் பலியிடப்பட்டார்.

IV) கிறிஸ்து, நியாயப் பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர்;

ஏனெனில், அதைவிடச் சிறந்த புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயுள்ளார்.

இன்னும் பல வகையில் கிறிஸ்து மேலானவர் என்று இந்நூலில் விபரமாகக் காணமுடியும்.

2-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில், கிறிஸ்துவின் மூலம் கிடைத்த இரட்சிப்பைக் குறித்து, "**இவ்வளவு பெரிதான இரட்சிப்பு**" என்று சொல்கிறார் ஆசிரியர். "இவ்வளவு" என்று சொல்லும் போதே ஏதோ ஒன்றுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார் என்பது விளங்குகிறது. ஒப்பிட்டுப் பார்த்து, அதைக் காட்டிலும், இந்த இரட்சிப்பு, "மிகவும் பெரிதாக இருக்கிறது" என்று பிரமித்து வர்ணிக்கிறார். அப்படியானால் எபிரேய ஆசிரியர் இந்தப் பெரிதான இரட்சிப்பை எதோடு ஒப்பிடுகிறார்?

இரண்டாம் அதிகாரத்தின் முதல் வசனம் துவங்கும் பொழுதே "**ஆகையால்**" என்ற ஒரு தொடர்பு வார்த்தையோடு ஆரம்பமாகிறது. ஒரு காரியத்தைப் போதுமான அளவுக்கு விளக்கிக் காட்டிய பின் அதனடிப்படையில் தான், "ஆகையால்" என்ற வார்த்தையை உபயோகிக்க முடியும். அப்படியானால், மூன்றாம் அதிகாரத்தில் அவர் எதைக் குறித்துப் பேசியிருக்கிறார் என்று கவனிப்பது மிகவும் அவசியம்.

முதலாம் அதிகாரம் முழுவதிலும், இயேசுகிறிஸ்துவின் **மகத்துவம் பற்றியும், அவர் தேவதூதரைக் காட்டிலும் எவ்விதத்தில் மேலானவர்**, சிறந்தவர் என்பதைப் பற்றியும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. ஒன்றாம் அதிகாரத்துச் செய்தியை அடிப்படையாக வைத்துத்தான், இரண்டாம் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களும் எழுதப்பட்டுள்ளது.

குறிப்பாக, நாம் 2 : 2 -ஐக் கவனிப்போம். "**ஏனெனில் தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக் கும், கீழ்ப்படியாமைக்கும், நீதியான தண்டனை வரத்தக்கதாக . . .**". அதாவது, தேவதூதர் மூலம் சொல்லப்பட்டவைகளுக்கு, ஒருவன் கீழ்ப்படியாமல் போனபோது அவனுக்கு நீதியான தண்டனை கிடைத்தது என்கிறார் ஆசிரியர்.

அப்படியானால், தேவதூதன் மூலமாய்க் கொடுக்கப்பட்டது எது? பழைய பிரமாணமாகிய, மோசேயின் பிரமாணம் தேவதூதன் மூலம் கொடுக்கப்பட்டதென்றே வேதம் சொல்கிறது.

1) முதன்முதலாக இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவான், பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு அதனடிப்படையில், ஆலோசனை சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டு, அவர்கள் முன்னிலையில் ஒரு பிரசங்கம் செய்கிறார். அப்பிரசங்கத்தில் தான், **"தேவதூதரைக் கொண்டு" நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற் போனீர்கள் (அப். 7 : 53) என்று குற்றம் சாட்டுகிறார்.**

2) அப்போஸ்தலன் பவுல், கலாத்தியருக்கு எழுதும்பொழுது இப்படியாகச் சொல்கிறார். "அப்படியானால், நியாயப் பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது. அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, **தேவதூதரைக் கொண்டு** மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது" (கலாத்தியர் 3 : 19) என்கிறார்.

ஆக, மேற்கண்ட வசனங்கள், **நியாயப்பிரமாணம் தூதன் மூலம்** கொடுக்கப்பட்டதென்பதற்கு சான்று பகருகிறது.

சரி, இப்பொழுது, தூதன் மூலம் கொடுக்கப்பட்ட பிரமாணம் மீறப்பட்டபொழுது,"நீதியான தண்டனை" கிடைத்ததா என்று பார்ப்போம். இதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு. சிலவற்றைப் பார்ப்போம்.

1) இஸ்ரவேலர், வனாந்திர யாத்திரையில் இருக்கும்பொழுது, ஒரு மனிதன் ஓய்வுநாளில் விறகு பொறுக்குவதைக் கண்டுபிடித்தார்கள்: ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிய குற்றத்தைச் செய்த அவன், கர்த்தருடைய கட்டளையின்படி கல்லெறிந்து கொல்லப்பட்டான். (எண் 15 : 32 - 36)

2) மோசேக்கு விரோதமாக, கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள் எழும்பி, எதிர்த்து நின்று கலகம் செய்தபொழுது, பூமி தன் வாயைப் பிளந்து, அவர்களையும், அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்குண்டான சகல பொருள்களையும் விழுங்கிப் போட்டது (எண் 16ம் அதிகாரம்)

3) மேலும், "உன் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி நிற்கிற ஆசாரியனுடைய சொல்லையாகிலும், நியாயாதிபதியினுடைய சொல்லையாகிலும் கேளாமல், ஒருவன் இடும்பு செய்தால் அவன் சாகக் கடவன்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக் கடவாய்" (உபா. 17:12) என்று சொல்லப்பட்டுள்ளது.

**இதன் மூலம், தூதன் வழியாகக் கொடுக்கப்பட்ட பிரமாணத்தை மீறின பொழுது, மிகக் கடுமையான தண்டனை கிடைத்துள்ளதென்பதை, மேற்கண்ட சம்பவங்கள் மூலம் அறிகிறோம்.**

இது உண்மையானால், தூதனைக் காட்டிலும் மிகவும் மேலானவரான கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு ஒருவன் கீழ்ப்படியாமற் போனால் தண்டனைக்கு எப்படித் தப்ப முடியும்? என்பதே எபிரேய ஆசிரியரின் கேள்வி.

ஏன், கிறிஸ்துவின் பிரமாணம் சிறந்தது என்பதற்கும் போதுமான காரணங்கள் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

I) முதலாவது, இது கர்த்தர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

II) அவர் பேசின, செய்த காரியங்கள் அவரிடத்தில் கேட்டவர்களால் - அப்போஸ்தலர்களால் உறுதியாக்கப்பட்டது.

III) அவர்கள் செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர்கள் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியின் வரங்களையும் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார் (எபி 2 : 3, 4)

கிறிஸ்துவின் பிரமாணம் தான் சிறந்தது என்பதற்கு வேறு என்ன ஆதாரங்கள் வேண்டும்? இப்புதிய பிரமாணத்தின் மூலம் கிடைக்கும். இரட்சிப்புதான் மிகப் பெரிதான இரட்சிப்பு". இங்கே இரண்டு இரட்சிப்புக்குமுள்ள வேறுபாட்டைப் பாருங்கள்.

| தூதன் மூலம் கொடுக்கப்பட்ட பிரமாணத்தின்படி இரட்சிப்பு | கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்ட சுவிசேஷத்தின் படி இரட்சிப்பு |
|---|---|
| 1. குறைவானது | 1. முழுமையானது |
| 2. சட்டங்களின் மூலம் பெறப்பட்டது | 2. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் கிடைக்கிறது |
| 3. தற்காலிகமானது | 3. நித்தியமானது |

சரி, "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்" குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?" முடியவே முடியாது என்பதுதான் இதற்கு ஒரே பதில்.

இது உண்மையானால், இரட்சிப்பைக் குறித்து நம்முடைய நிலை என்ன? எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம் என்று பகல் கனவு கண்டு கொண்டுள்ளோமா? இரட்சிப்பைப் பற்றிக் கவலைப்படாத ஒரு சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம், என்பது உண்மையே. ஆனால், இரட்சிப்பு என்பது ஒரு தனி மனிதன் சம்பந்தப்பட்டது. நாம் வாழும் தேசத்தையோ, சார்ந்திருக்கும் சமுதாயத்தையோ, நம்முடைய குடும்பச் சூழலையோ வைத்து நாம் தப்பித்துக் கொள்ள முடியாது.

அன்பரே! வருடத்தின் இறுதிநாட்களில் நாம் நின்று கொண்டுள்ளோம். கர்த்தர் அனுமதி கொடுத்தால், ஒரு புதிய வருடத்திற்குள்ளாக - நுழைய காத்திருக்கிறோம். இந்த வருடத்தின், தம்முடைய வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்க்க இது சரியான தருணம். கடந்து போன வருடத்தில், கர்த்தரோடு நமக்கிருந்த உறவு எப்படிப்பட்டதானதாக இருந்தது என்று ஆராய்வோம். இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கிடைத்தற்கரிய இரட்சிப்பைப் பற்றி நம்முடைய அணுகுமுறை எப்படியிருந்தது என சிந்திப்போம்.

நம்முடைய இரட்சகர் இப்பூமிக்கு வந்தது, ஏதோ நமக்கு ஒரு கொண்டாட்டத்தைக் கொடுக்க அல்ல. அல்லது வருடத்தின் இறுதி நாட்களில் அவரை நினைத்துவிட்டு, மீண்டும் மறப்பதற்கு அல்ல. பாவிகளை இரட்சிக்கவே அவர் இப்பூமிக்கு வந்தார். நாம், பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக வேண்டுமென்பதற்காகவே, தேவன் இயேசுவை இப்பூமிக்கு அனுப்பினார். பிதாவாகிய தேவன், இயேசுக் கிறிஸ்துவை அனுப்பின நோக்கத்தையும், இயேசு கிறிஸ்து மானிடராய் இப்பூமிக்கு வந்ததின் நோக்கத்தையும் நாம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றிவிட்டோமா? அல்லது இரட்சிப்பைக் குறித்த எண்ணமற்றவர்களாக இன்னும் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோமா?

ஒருவேளை நாம் இதுகாறும் இரட்சிப்பைப் பற்றிக் கவலையற்றிருப்போமானால், சரி, போனது போகட்டும். தேவன் நமக்கு இன்னும் ஒரு வருடத்தைக் கூட்டிக் கொடுக்க ஆயத்தமாகி வரும்பொழுது, நாம் தொடர்ந்து உதாசீனமாக இருப்பது நியாயமா? புதிய வருடத்தைக் காண ஆவலோடு துடித்துக் கொண்டிருக்கும் நாம், ஏன், அதை இரட்சிப்பின் அனுபவத்தோடு காணக் கூடாது?

எனக்கும், இரட்சிப்புக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்காதே நீயும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். அப்போஸ்தலன் பவுல். தீமோத்தேயுவுக்கு எழுதும் ஒரு கருத்தைக் கவனியுங்கள், " எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியும் அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்று சொல்கிறார் ( I தீமோத்தேயு 2 : 4)

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்லிச் சென்ற, வாக்குமாறாத இரட்சகர், இன்னும் ஏன் வராமலிருக்கிறார் என்று எப்போதாவது எண்ணியதுண்டா? அவர் சொன்ன வாக்கை அவர் நிச்சயமாக மறந்துவிடவில்லை. ஏன், என்பதற்கு, அப்போஸ்தலர் பேதுரு கொடுக்கும் காரணத்தைப் பாருங்கள்",தாமதிக்கிறார் என்று எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (II பேதுரு. 3 : 9).

ஒருவேளை, அவருடைய நீடிய பொறுமை இவ்வருடத்தோடு முடியுமென்றால், நம்முடைய நிலை என்னவாகும்? "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்" குறித்து கவலையற்றிருந்த மாபெரும் குற்றத்திற்கு ஆளாவோமானால் நாம் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ள முடியாது. ஆகவே தூதனைக் காட்டிலும் மேலானவராக உள்ள, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவோம். ஆம், விசுவாசித்து (அப் 8 : 12), மனந்திரும்பி (அப் 2 : 38), அறிக்கையிட்டு (ரோமர் 10 : 9,10), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (அப் 22 : 16) பெற்று பெரிதான இரட்சிப்புக்குப் பாத்திரவான்களாக மாறுவோம்!

கர்த்தர் இவ்வருட முடிவுக்குள்ளாக வந்துவிட்டால், தண்டனைக்குத் தப்பி மறுமையை அவரோடு கூட கழிப்போம். ஒருவேளை அவருடைய வருகை தாமதிக்குமானால், புதிய ஆண்டை இரட்சிப்பின் அனுபவத்தோடு கண்டு, புதிய ஜீவிகளாக ஜீவிப்போம்! வெற்றி வாழ்க்கை வாழ்வோம்!!

***கர்த்தர் உங்களோடிருந்து காத்து வழிநடத்துவாராக!***
***அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.***

**- EZS. ராஜநாயகம்.**

## வசனத்தின் வல்லமை தெரியுமா?

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

**எபி. 4 :12**

# ஆவியின் அளவுகள்

பரிசுத்த ஆவியானவரின் பணிகள் பற்றிய தொடரில் இது மூன்றாவது கட்டுரை. ஆவியானவரின் அளவுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கிறிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலர் யோவான் கூறினார். "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" (யோவான் 3 : 34) கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் தேவன் அளித்தார் என யோவான் குறிப்பிடும்போது, அவர் என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறினார்? அளவுக்கு வரம்பு உண்டு. வேறு விதமாகக் கூறினால், ஆவியை கிறிஸ்துவுக்கு ஒரு அளவோடு மட்டும் தேவன் கொடுத்திருப்பாரேயானால் அந்த குறிப்பிட்ட வரம்பிற்குள்தான் ஆவியின் வல்லமையை அவர் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால் தேவன் ஆவியை அவருக்கு அளவுடன் கொடுக்கவில்லை. மாறாக, அளவில்லாமல் கொடுத்தார். ஆவியின் வல்லமையை கிறிஸ்து உபயோகிக்கும் போது, தேவனாவது, ஆவியானவராவது அவருக்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை என்று அதற்குப் பொருள்.

தொடர்ந்து, ஆவியை அளவில்லமால் கிறிஸ்துவுக்கு தேவன் கொடுத்தார் என்றால், ஒருவேளை பிறருக்கு ஆவியானவர் அளவுடன் கொடுக்கப்பட்டார் எனக் கொள்ளலாம். ஆம், அப்படியே தான் நடந்தது அப்போஸ்தலர்களும், யார் மேல் அவர்கள் கை வைத்தார்களோ அவர்களும் மற்றும் எல்லா கிறிஸ்தவர்களும் இதில் அடங்குவார்கள்.

ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட கிறிஸ்து, பிசாசுகளைத் துரத்தவும், மரித்தோரை எழுப்பவும், கடலில் புயலை அடக்கவும், தண்ணீரை இரசமாக்கவும், தண்ணீரின் மேல் நடக்கவும் இன்னும் இது போன்ற பல அற்புதங்களையும் செய்யக் கூடியவராக இருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் எழுதியதைப் பாருங்கள் "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". (யோவான் 20 : 30, 31)

ஆனால், ஒருவேளை எல்லாவற்றையும் கடந்த ஒரு உண்மை உண்டென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பிறருக்கு அளிக்கும் சக்தியை இயேசு பெற்றிருந்தார் என்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்க

அவருக்கு மட்டுமே முடிந்தது. சீடர்களின் மேல் கையை வைத்து அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கும் வல்லமை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த சீடர்களால் வேறு யாருக்கும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுக்க இயலவில்லை. அவர்கள் பெற்றுக்கொண்ட வல்லமையையும் பிறருக்குக் கொடுக்க முடியவில்லை.

ஆவியானவரை அளவுடன் பெற்றவர்களை இங்கு நாம் பார்ப்போம். அப்போஸ்தலர்களிலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் வரையிலும் உள்ள சகல கர்த்தரின் மக்களும், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அளவிற்கு பெற்றிருக்க வேண்டும், அல்லது பெற்றுக் கொள்ள வேண்டும் என பலர் இன்று நம்புகின்றனர். இது உண்மை அல்ல என்பதை நாம் காணப்போகிறோம். தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அனுப்புவதாக இயேசு வாக்களித்திருந்தார் என்பதை முதலில் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவரைப் பின்பற்றிய எல்லாருக்கும் அல்லது இனிமேல் அவரைப் பின்பற்றப்போகும் எல்லாருக்கும் இந்த வாக்குத்தத்தத்தை அவர் அளிக்கவில்லை. யோவான் புத்தகத்துக்கு நாம் திரும்பும்போது, அங்கே அப்போஸ்தலர்களிடம் பேசிய கர்த்தர், தான் அவர்களை விட்டு விலகிப் போவதைப் பற்றியும், அவ்வாறு சென்றபின் தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவதைப் பற்றியும் கூறுகிறார். அந்த தேற்றரவாளனே பரிசுத்த ஆவியானவர் என அடையாளம் காட்டப்படுகிறார். (யோவான் 14 : 26) கிறிஸ்து தொடர்ந்து கூறுவதைப் பார்ப்போம்."பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்த படியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்". (யோவான் 15 : 26, 27) மீண்டும் அவர் கூறுகிறார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜன மாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்பு வேன். "(மத். 16:7) தொடர்ந்து, "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோ 16 : 13). இப்போது, மேற்சொன்ன வசனங்களில், கர்த்தர் யாருடன் பேசிக் கொண்டிருந்தார்? இயேசு என்ன பேசிக்கொண்டிருக்கிறார் என நீங்கள் கவனித்துப் பார்த்தால், ஆரம்பத்திலிருந்தே அவருடன் கூட இருந்த அப்போஸ்தலர்களிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார் என்பது மிகத் தெளிவாகத் தெரியும். (யோ. 15 : 27) அப்படியானால், கேள்வி இதுதான், கர்த்தர் தனது வாக்கை நிறைவேற்றினாரா?

ஆனால், இறுதியாக நடந்தது என்னவென்று நாம் காணும் முன்னர், தனது பரலோகத் தந்தையிடம் செல்லுவதற்கு சிறிது முன்பு அப்போஸ்தலர்களிடம் நமது கர்த்தர் அறிவித்தவைகளை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்". (லூக்கா 24 : 49) லூக்கா மேலும் எழுதியிருக்கிறார்,"தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி, யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப் 1 : 1 -5) அதன்பின் இயேசு கூறினார். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப் 1 : 8) இந்த அறிக்கைகளிலிருந்து நிச்சயமாக இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார் என்பதை நாம் காண முடியும். அது உண்மையாக இருக்கும்போது, அவ்வல்லமையைப் பெற்றவர்கள் யார்? அப்போஸ்தலர்கள் மட்டுமா, அல்லது பொதுவில் எல்லா விசுவாசிகளுமா?

இப்போது, அப்போஸ்தலர் நடபடி 2ம் அதிகாரத்திற்குத் திருப்பிக் கொண்டு, என்னோடு வாசியுங்கள். "பெந்தகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". (அப் 2 : 1 - 4) அந்த

அதிகாரத்தைப் படிக்கும்போது, அப்போஸ்தலர்கள் திரளான மக்களிடையே போதித்துக் கொண்டிருந்ததையும், அதிலே 3000 பேர் வரை நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்றும் பார்க்கிறோம். மேலுமாக, ஒரு அறிக்கையைப் படிக்கிறோம். "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது" (அப். 2 : 43).

திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றுக் கொண்டனர் என்பதே இதன் முடிவாகும். ஆனால் அவர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர்; செய்ய வேண்டிய பணியோ ஏராளமாக இருந்தது. அப்போஸ்தலர் நடபடி 6ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை சீடர்களிடமிருந்து தெரிந்து கொண்டு, அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளித்தனர், என்று காண்கிறோம். ஆனால் இந்த மனிதர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தனர் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏற்கனவே அவர்கள் பெற்றுக் கொண்டதற்கும், கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் அளவைப் பெற்றுக் கொண்டதற்கும் என்ன வித்தியாசம்? இந்த ஏழு பேரும் முன்பு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது அற்புத அடையாளங்களைச் செய்ய முடியாத அளவுக்கு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருந்தனர். (அப். 2 : 38) கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது. அது ஒரு அற்புதங்கள் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகும்.

இறுதியாக, இன்று ஒரே ஒரு அளவிலான பரிசுத்த ஆவியை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொள்வோம். அது அற்புதங்கள் செய்யக் கூடாத அளவிலான பரிசுத்த ஆவி. கர்த்தருக்குக் கீழ்ப்படியும் எல்லாருக்கும் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவி. இவை பற்றியும் இன்னும் அதிகமாகவும் அடுத்து வரும் இதழ்களில் படிப்போம்.

**J.C. சோட்.**

## என்னைப் போஷித்தருளும்

**"நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தருளும்".**

**நீதி.30 : 9**

# பெண்கள் பகுதி

## தாய்மார்களே! உங்கள் வருமானத்திற்கு விலையாக நீங்கள் எதைக் கொடுக்கிறீர்கள் தெரியுமா?

காலங்கள் எவ்வளவாய் மாறிவிட்டது! முன்நாட்களில் பெரும்பாலான குடும்பங்கள் கிராமங்களிலும், சொந்தமான தோட்டங்களிலும் தங்களுடைய உறவுகள் சூழ இருக்க குடியிருந்து வந்தார்கள். அநேக குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்தன.

பொருளாதாரப் பிரச்சனை தங்களை நெருக்கினபடியால் அநேக இளம் தம்பதிகள், பிழைப்பைத் தேடி பட்டணங்களில் குடியேறினார்கள். அப்படிப் போனவர்கள் பட்டண வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வசதி இல்லாமல் நெருக்கப் பட்டார்கள். அநேகர் பெண்களின் சமத்துவம், பெண்ணுரிமை போன்ற நவீன கொள்கைகளால் கவரப்பட்டார்கள். அதன் விளைவு இன்று உலகெங்கும் அதிக எண்ணிக்கையிலான இளம் மனைவிகள் குடும்பங்களை விட்டு வெளியில் சென்று பணிபுரிய ஏதுவாகியது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. குடும்பத்தாரைப் போஷிப்பதற்கு, அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்கு கூடுதலான வருமானம் அவசியமா என்று பரிசீலிக்காமலே, மனைவி வெளியே சென்று வேலை செய்யத் துவங்கி, தற்போது இரண்டு வருமானத்தில் குடும்பம் நடத்தப் பழகிவிட்டார்கள். இது ஒரு மோசமான தவறு. ஏனெனில் இரண்டு வருமானத்தில் குடும்பம் நடத்திப் பழகிவிட்டு, பிறகு ஒரு வருமானத்தில் வாழ்க்கை நடத்துவது கிட்டத்தட்ட முடியாத காரியம்.

இந்த நிலையில் ஒரு குழந்தை பிறக்கிறது. இப்பொழுது மனைவி என்ன செய்கிறாள்? இன்றைக்கு உலகம் முழுவதும் பின்பற்றப்படும் ஒரு தவறான பழக்கத்தை தானும் செய்கிறாள். அதாவது தன்னுடைய கூடுதலான வருமானத்தை விட்டுவிட மனதில்லாமல் பெற்ற குழந்தையை, தாத்தா பாட்டிமார்களிடமோ அல்லது பிள்ளை வளர்ப்பு மையத்திலோ விடுகிறாள். கணவன்- மனைவியாக இருக்கும் பொழுதே இரண்டு சம்பளத்தில் செலவு செய்து பழகிவிட்டபடியால், ஒரு குழந்தை பிறந்து குடும்பம் பெரிதாகும்பொழுது - செலவுகள் கூடும்பொழுது இனி தாயின் வருமானம் தவிர்க்க முடியாதது என்ற ஒரு பொய் சமாதானம் ஏற்படுகிறது.

பெற்ற தாய் தன்னை பேணி வளர்க்காமல் விட்டுப் போவது பாவம் அந்தக் குழந்தைக்குத் தெரியாது. குழந்தைகள் இன்னும் பெரிதாகி தன்னுடைய உதவி அவசியம் என்ற நிலைவரும் போது -

பொருளாதார நிலையும் அனுமதித்தால் - வீட்டிலிருந்து கொள்ளலாம் என்று நினைக்கிறாள்.

ஆனால், சிறு குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சியின் கருத்து வித்தியாசமாக உள்ளது. குழந்தை பிறந்தது முதல் தாயின் மூலம் தனக்குக் கிடைக்கும் அன்பு, மனோநிலை, பாதுகாப்பு போன்றவற்றிற்கும் இவைகள் இல்லாத நிலைக்கும் ஒரு வேறுபாட்டைக் காட்டுகிறது. ஒரு குழந்தையின் முதல் வயது, அதனுடைய சரீர பலத்திற்கும், மனநிலை பாதுகாப்பிற்கும் மிகவும் முக்கியமானது என்று மருத்துவர்கள் இப்போது உணர்கின்றனர். இந்த பருவத்தின்தான் பத்தம்-உறவு என்பவைகள் ஏற்படுகிறது. ஆக, இத்தருணத்தில் தாயானவள் குழந்தையின் அருகே தொடர்ந்து இருந்து, அன்பு பொழிதல், பாசம் காட்டுதல், முறையான கவனிப்பு போன்ற வற்றில் சரியான கவனம் செலுத் தினால், குழந்தையானது மகிழ்ச் சியானதாகவும், மனோரீதியாக சமச்சீ ர் பொறுந்தினதாகவும் இருக்கும்.

இந்த வகையாகக் கவனிக்கப்படாமல், மற்றவர்களின் பொறுப்பிலும், குழந்தை வளர்ப்பு மையங்களிலும் விடப்படும் குழந்தைகள் அடிக்கடி நோய் வாய்ப்படுகிறவைகளாகவும், சுற்றுபுறச் சூழலுக்கு ஒத்துப் போகாத மனநிலையுடையதாகவும் இருக்கும். இதைக் குறித்து நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் அதிக குழந்தைகள் உள்ள இடத்தில் ஒவ்வொரு குழந்தையையும், அதற்கேற்ற வகையில் பராமரிக்க ஆயாக்களுக்கு நேரமும், பொறுமையும் இருக்காது.

சில சூழ்நிலைகளில், தாயானவள் வெளியே சென்று வேலை செய்வது தவிர்க்க முடியாதது என்பது உண்மையே. ஒருவேளை கணவன் இறந்து போயிருக்கலாம், அல்லது உடல் ஊனமுற்றிருக்கலாம், அல்லது குடும்பத்திற்கு தேவையான ஆகாரம் கொடுக்கமுடியாமல் குறைந்த வருமானமுள்ளவராக இருக்கலாம். வேறு வழியே இல்லாத இக்குடும்பங்கள் பரிதாபத்திற்குரியவையே. இப்படிப்பட்ட குடும்பங்களில் உள்ள பெரியவர்கள், தாத்தா பாட்டிமார்கள் - குழந்தை வளர்ப்பிலே போதுமான உதவி செய்தால், அக்குழந்தைகளுக்கு, பெற்றோர் இல்லாத சூழ்நிலையில் ஏற்படும் குறையை ஓரளவு நிறைவு செய்ய முடியும்.

இன்றைக்கு அநேக குடும்பங்களில் என்ன நடக்கிறது? அநேக தாய்மார்கள் தங்கள் குடும்பத்திற்கு அவசியமில்லாத, ஆடம்பரமான பொருள்களை வாங்க வேண்டுமென்பதற்காகவும், தன்னுடைய அதிகமான வருமானத்தை கணவன் விரும்புகிறார் என்பதற்காகவும் வேலைக்குச் சென்று கொண்டுள்ளனர். அவர் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயும், அவள் பெற்ற தன்னுடைய சொந்தக் குழந்தையின் நலனிலிருந்து உறிஞ்சப்படுகிறது என்பதுதான் உண்மை. பெற்ற பிள்ளைகளை விலையாகக் கொடுத்து பொருள்களை வாங்குகிறாள். பண வசதியோடு வாழ்கிறாள்.

பெற்றோர் இருவருமே வீட்டிற்கு வெளியில் வேலை செய்து மாலை வேலைகளில் வீடுவரும் பொழுது களைப்பாகவும், வேலை செய்யும் இடத்துச் சூழ்நிலையில் எரிச்சலாகவும் வருவார்கள். குழந்தைகள் அவர்களுடைய வருகையால் களிகூடர்ந்து எழுப்பும் கூச்சலைக் கூட கவனிப்பதற்கு மனமிருக்காது. உணவு சமைப்பது, துணி துவைப்பது, சுத்தம் செய்வது, குழந்தைகள் படிப்பை கவனிப்பது போன்றவற்றிற்கும், குழந்தைகளை அணைத்து பாசத்தோடு

வளர்ப்பதற்கும் நேரமிருக்காது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் காரியங்களைப் பேசவும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், ஒழுக்க ரீதியான காரியங்களையும், ஆவிக்குரிய காரியங்களைப் போதிக்கவும் முடிவதில்லை. இவை அனைத்தும் ஒரு குடும்பத்திற்கு அவசிய மானவைகள்.

மேலைநாடுகள் என்றழைக்கப்படும் மேற்கத்திய நாடுகளை கவனித்தால் இன்றைய நாகரிகப் பெற்றோர்கள் செல்லும் பாதை எவ்வளவு பரிதாபகரமானது என்பது தெரியும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, வேலைக்குச் செல்லும் அமெரிக்காத் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. குழந்தைகளோடு இருக்க வேண்டிய மொத்தத் தாய்மார்களில், பாதிக்கு மேலானோர் வேலைக்குச் சென்று விடுகின்றனர். அதன் விலை என்ன தெரியுமா? வேலை செய்யும் தாய்மார்களின் சராசரி எண்ணிக்கை அதிகமாவதைப் போலவே, விவாகரத்து, குடும்பச் சீரழிவுகள், மனோரீதியான பிரச்னைகள், குற்றங்கள் குறிப்பாக குழந்தைப் பருவ குற்றங்கள் போன்றவையும், இன்னும் மனிதனுக்குத் தெரிந்த பலவித மான சமுதாயப் பிரச்னைகளும் அதிகரித்துக் கொண்டுள்ளது.

ஒருவேளை இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், மேற்சொன்ன அநேக சமூகப் பிரச்சனைகளுக்கு குடும்பங்கள் சீரழிந்து போவதுதான் பிரதான காரணம். அது தாய்மார்கள் தேவன் தங்களுக்குக் கொடுத்த, நல்ல மனைவியாயிருத்தல், குடும்பத்தை பராமரித்தல், சிறந்த தாயாக இருத்தல் - போன்றவைகளில் தங்களுடைய நேரத்தையும், பெலனையும் செலவழிக்காமல், சம்பாதிக்கும் விஷயத்தில் ஆணோடு சரிநிகர் போட்டி போடுவதாலும் ஏற்படும் விளைவே.

மீதி இருக்கிற உலகமானது சொல்ல முடியாத துயரங்களிலிருந்தும், அழிவிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், அமெரிக்க தேசத்தில், இம்முறையைப் பின்பற்றியதால் வந்த விளைவுகளிலிருந்து எச்சரிப்புப் பெற்றுக் கொள்வது நல்லது.

தேவன் சொல்கிறார், "தேவ வசனம் தூஷிக்கப் படாதபடிக்கு பாலிய ஸ்திரிகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும் . . . . " (தீத்து 2 : 4, 5). தேவ ஞானத்தைக் காட்டிலும் நாம் மேம்பட்டவர்களல்ல. திருமணத்தையும், பெற்றோராயிருக்கும் ஆசிர்வாதத்தையும், குடும்பத்தையும் அவர் திட்டமிட்டார். அவை வெற்றிகரமாக இயங்க எது தேவை, எது சிறந்தது என்பது அவருக்குத் தெரியும். அன்பும், பக்தியும் நிறைந்த தாய், தன்னுடைய குடும்பத்தை மாத்திரம் பராமரிக்காமல், ஒட்டு மொத்த மானிடத்தின் நலனுக்கு துணைபுரிகிறாள்.

பெண்கள் இதைவிடச் சிறந்த ஒரு வேலையைச் செய்ய முடியாது. தேவன் விரும்பும் குடும்ப வாழ்வை வாழ அவர் உதவி செய்வாராக!

**B.B. CHOATE** **R.R. NAYAGAM.**

# மனந்திரும்புவதின் அவசியம்

மனந்திரும்புவதின் அவசியத்தைப் பற்றியோ, அல்லது மனந்திரும்புவது என்றால் என்ன என்று கூட அறியாத பலமக்கள் இன்னும் இருக்கின்றனர். மனந்திரும்புதலைப் பற்றி சுவிசேஷம் நிறையச் சொல்லுகிறது. எனவே, இக்காரியத்தைப் பற்றி நமக்குத் தேவைப்படும் தகவல்களை அறிய, நாம் சொல்ல வேண்டிய சிறந்த இடம் இதுவே.

இதய மாற்றம் அல்லது மனமாற்றம்; வாழ்வின் மாற்றம்; ஒரு நிலையின் மாற்றம் இவையாவும் மனந்திரும்புதலோடு சம்பந்தப்பட்டவை. பாவத்தில் வாழ்வது, பாவத்திற்கு விலகி வாழ்வது, பாவத்தை விட்டு விட்டு மீண்டும் தொடராதிருப்பது இவைகளும் மனந்திரும்புதலோடு சம்பந்தமுள்ள காரியங்களே. தந்தை திராட்சை தோட்டத்திற்கு வேலைக்குப் போகச் சொன்ன ஒரு வாலிபனின் கதையை கிறிஸ்து கூறினார். முதலில் மறுத்துக் கூறிய மகன், பின்னர் மனந்திருந்தி வேலைக்குச் சென்றான். (மத் 21 : 28) அடுத்து, மனந்திரும்புதலுக்கு ஒரு நல்ல விளக்கத்தை பவுல் தருகிறார். "திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக் கடவன்" (எபே 4 : 28) உண்மையில், ஒருவன் தான் பாவத்தில் இருப்பதையும், வீழ்ந்து போனதையும், பாவத்திலிருந்து மீண்டும் இயேசுவை விசுவாசிக்க விரும்புவதையும், இனி மாறுபட்ட ஒரு புதிய வாழ்க்கை வாழ வேண்டுமென்றும் அறியும் போது, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யவும் இப்போது தயாராக இருக்கிறான். இனி தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் வருகிறான். (அப். 2) பாவத்தைப் பொறுத்தவரையில் மனமாற்றம் அடைந்திருக்கிறான் என்றும், இனி பாவமற்ற வாழ்க்கை வாழ அவன் விரும்புகிறான் என்றும், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதின் மூலம், அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, ஒரு புதிய நிலைக்குள் அதாவது, கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிக்கிறான் என்றும் இதற்கு அர்த்தம். இவை யாவும் மனந்திரும்புதலின் விளைவுகள்.

தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பாத வரை, அநேகமாக, ஒருவன் தனது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட இயாலாது. பாவம் தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. அது மரணத்தைக் கொண்டு வருகிறது (ரோமர்6 : 23) நாம் எல்லாரும் பாவிகளாக இருப்பதால், பாவத்தை ஒப்புக் கொள்ளுவதில் வெட்கமில்லை. ஆனால், பாவத்தை ஒப்புக் கொள்ளவோ அதற்காக மனஸ் தாபப்படவோ நாம்

விரும்பாவிடில் அதுவே வெட்கப் பட வேண்டிய காரியம். தம்மிடம் பாவமே இல்லை என்பது போல சிலர் நடந்து கொள்ளுகின்றனர். அல்லது தாங்கள் நல்லவர்களாக இருப்பதால் மனந்திரும்பத் தேவையில்லை என்கின்றனர். தங்களைப் பாவி என ஒப்புக் கொள்ளுவது அவமானகரமான செயல் என சிலர் நினைக்கின்றனர். மீண்டுமாக, நாம் ஒப்புக் கொள்ளுகிறோமோ இல்லையே, நாம் பாவிகள் தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நாம் நியாயவான்களாக இருப்பின் பாவத்தில் சம்பளம் மரணம் என்பதை புரிந்து கொள்ள முடியும். தலைக்கனம் கொண்டு மனந்திரும்ப மறுத்து முடிந்து போவதை விட, மனந்திரும்பி வாழ்வது சிறப்பு.

நல்ல காரியம் எதையும் விட்டுவிட கர்த்தர் ஒருபோதும் நம்மிடம் கேட்கவில்லை. கெட்டதையும் தவறையுமே விடச் சொல்லுகிறார். நாம் நற்பண்புகளுடன் வாழ்வதாக எண்ணினாலும் கூட, மனந்திரும்புவது அவசியம். நமது சொந்த நல்ல பண்புகளையே நமது இரட்சிப்புக்கு சார்ந்திருப்பதால் நாம் மனந்திரும்புவது தேவையானது. நமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டி கர்த்தர் சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். கீழ்ப்படிதலுடன் அவரை நோக்கி நாம் திரும்பும் போது மட்டுமே நாம் இரட்சிப் படையக் கூடும்.

ஒருவன் கிறிஸ்தவனான பின் நடப்பது என்ன? அதன் பின்னர் மனஸ்தாபப்பட வேண்டிய தேவை உண்டா? நிச்சயமாக, மாய வித்தைக் காரனை சீமோனையும், அவன் தேவனுடைய வரத்தை பணத்தால் பெற்றுக்கொள்ள முயன்ற விதத்தையும் நினைத்துப் பாருங்கள். பேதுரு இதற்காக அவனைக் கண்டித்து, மனந் திரும்ப அறிவுரை கூறுகிறான். தனக்காக கர்த்தரை வேண்டிக்கொள்ள சீமோன் பேதுருவிடம் கேட்டுக் கொண்ட பின்னர், தேவனுடைய விசுவாச முள்ள பிள்ளையாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். (அப் 8 : 20 - 22) அடுத்து, லூக்கா 15ம்ம அதிகாரத்தில் ஒரு கெட்ட குமாரனைப் பற்றிய கதையைக் காண்கிறோம். தனது தந்தையிட மிருந்து அவன் பங்குக்குரிய ஆஸ்தியைப் பெற்றுச் சென்று, துன்மார்க்கமாய் வாழ்ந்து அதை அழித்துப்போட்டான். பின்னர், பன்றிகளுக்கு உணவளிக்கும் 'பணி' கிடைத்தது. தானும் பன்றியின் உணவை புசிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தான். அதன்பின் வசனம் கூறுகிறபடி, அவன் புத்தி தெளிந்து மனந்திரும்பி தன்னுடைய தந்தையிடம் திரும்பிச் சென்றான். காணாமற்போய் திரும்பி வந்த மகனை தகப்பன் கண்ணியத்துடன் ஏற்றுக் கொண்டான். அடுத்து, யாக்கோபு கூறுகிறார். "நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக் 5 : 16) நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், தேவனுடைய பிள்ளைகளாக இருப்பினும், நாம் இன்னும் பாவிகளே. வேண்டுமென்றோ, அறிந்தோ நாம் பாவம் செய்யாமல் இருக்கக்கூடும். ஆனாலும், நாம் தவறுகளைச் செய்ய, பேசக்கூடாதவற்றைப் பேச, செய்யக் கூடாதவற்றைச் செய்ய இசையும் குணம் படைத்தவர்களாக இருக்கிறோம்.

நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்யாமல் விட்டுவிடக்கூடும். இன்னும் இது போன்று எத்தனையோ, நாம் தவறைச் செய்ய விரும்புகிறோம் என்பதல்ல; என்ற போதிலும் எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் இயற்கையிலேயே பாவஞ்செய்யக்கூடியவர்களாக இருக்கிறோம். எனவே, பாவமன்னிப்புக்கென்று நாம் எப்போதுமே ஜெபஞ் செய்வது தான் சரியான காரியம் ஆகும். "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத் 6 : 12) என ஜெபஞ்செய்ய கிறிஸ்து தனது சீடர்களுக்குப் போதித்ததை நீங்கள் நினைவு கூறுகிறீர்களா?

ஆனால், வேண்டுமென்றோ, அறிந்தோ பாவங்களை செய்பவரின் நிலை என்ன? ஏதோ தவறு நடக்கிறது என அறிந்த போதிலும், எப்படியோ அதை செய்து விடுகிறான். ஒருவேளை அவன் சோதிக்கப்பட்டு அதில் வீழ்ந்து போகக் கூடும். அவனுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாமல், கெட்டவைகளையும் தவறுகளையும் அவன் செய்யக் கூடும். அறிந்தே பாவஞ்செய்வது, சந்தேகமின்றி, எப்போதும் மிகவும் ஆபத்தான ஒரு காரியம். ஆனால், தனது பாவத்தை ஒருவன் ஒப்புக்கொள்ளவும் அதற்காக மனஸ்தாபப்படவும் மறுப்பது அதைவிட மிகவும் ஆபத்தானது. ஒருவன் தனது தவறை உணரவேண்டியது அவசியம்; மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்ப வேண்டும். தனது பாவங்கள் மன்னிக்கப்பட கர்த்தரிடமும் சகோதரர்களிடமும் தன்னை மன்னிக்க கோர வேண்டும்.

சில சமயங்களில், குறிப்பாக சபை உறுப்பினர்கள், வெளிப்படையாக குற்றத்தைச் செய்யும் போது, அதற்காக அவர்கள் மனந்திருந்தி பாவங்களை வெளிப்படையாக அறிக்கை செய்தால் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதை அவர்கள் உணருவதாகத் தெரியவில்லை. ஏற்கனவே, குறிப்பிட்டபடி நமது சகல ஜெபங்களிலும் நமது பாவங்களை கர்த்தர் மன்னிக்க வேண்டுமென்று வேண்டுவதே சரியான முறையாகும். நாம் மன்னிப்படைய, மனந்திரும்புவதோடு சகல காரியங்களிலும் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக வாழ முயலவேண்டும்.

நமது பாவங்களுக்கான மனஸ்தாபப்பட வேண்டும் எனக் கூறுவது நம்மை இழிவுபடுத்துவதற்காக அல்ல; மாறாக அழித்துப்போடக்கூடிய பாவங்களிலிருந்து நமது ஆத்மாவை விடுவிக்க வேண்டிதான். வியாதிகளிலிருந்து விடுபட நாம் மருந்துகளையோ அல்லது அறுவை சிகிட்சையையோ ஏற்றுக் கொள்ளுகிறோம். அதைவிட்டுவிட்டு, மருந்துகளைத் தவிர்த்து மரணத்தைத் தழுவிக்கொள்ளுவோமா? நமது சரீரத்துக்கு மருந்துகள் தேவை என்பதை நாம் உணரும் போது, ஆவியில் வாழ எது தேவையோ அதைச் செய்யத் தவறலாமா? எனவே, மனந்திரும்புவோம். வாழுவோம்.

**- J.C. சோட்**

## எச்சரிக்கையாருங்கள்

1. ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள் (மாற்கு : 13 : 5)

2. விதவைகளின் வீடுகளைப் பட்சித்து பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக்குறித்து எச்சரிக்கையாயிருங் கள் (மாற்கு : 12 : 40)

3. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கை யாயிருங்கள் லூாக் 12 : 15

4. உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகதபடிக்கு எச்சரிக்கையாயிரு (லூாக் : 11 : 35)

5. உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தி னாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணி களாக வைத்த மந்தை முழுவதையங் குறித்து எச்சரிக் கையாயிருங்கள் (அப் : 20 : 28)

6. பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கை யாயிருங்கள் (பிலிப் 3 : 2)

## ஊழியர்களுக்கு ஓர் இனிய செய்தி

"நமது திருமறை ஆசான்" மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளிலிருந்து, மிகச் சிறப்பான சில கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து "கைப்பிரதிகளாக" (Tracts) வெளியிட உள்ளோம்.

வீடு சந்திப்புகளிலும் மற்றும் ஊழியங்களிலும் பயன்படுத்துவதற்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

தேவைப்படுவோர் உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**Bro. S.S. ராஜன்**
கொசவப்பட்டி
சானார்பட்டி வழி - 624 304
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

## கண் பார்வை இழந்த ஒரு மனிதன் கண்டது என்ன?

உங்கள் வாழ்க்கை சிதறடிக்கப்பட்டு போவதை சிறிது சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொழில் பற்றிய கனவில் காலத்தைக் கழிக்கிறீர்கள். உதாரணத்திற்கு ஒரு பிரபல வழக்கறிஞர் ஆக நீங்கள் விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்கள் கனவில் தடுமாற்றம் எதுவும் இல்லை. சட்டம் படிக்க வேண்டுமென நீங்கள் முடிவு எடுத்த காலத்திலிருந்து இதுவரை சகல காரியங்களும் சரியான திசை நோக்கியே போய்க்கொண்டிருக்கின்றன. உங்கள் கடின உழைப்பால், உங்கள் நண்பர்களையும் சக மாணவர்களையும் விட முன்னணியில் வேகமாக கடந்து வந்திருக்கிறீர்கள். பின்னர், உங்களுடைய 30 வயது தொடக்கத்திலே, உங்களுடைய இலட்சியத்தை அடையக் கூடிய தருணத்திலே சகலவற்றையும் துறந்து விட்ட நிலையில், இதுவரை எதுவுமே நடக்காத மாதிரி எங்கோபோய்க் கொண்டிருக்கிறீர்கள்.

இப்படிப்பட்ட ஒரு காட்சியை சிந்தித்துப் பார்க்கக் கடினமாகத் தோன்றலாம். ஆனால் 1900 ஆண்டுகளுக்கு முன்னே இது போன்று உண்மையிலேயே நடந்துள்ளது."சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், ஆண்டவரே நீர் யார், என்றான். அதற்குத் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குத் கர்த்தர், நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவனுடனேகூட பிரயாணம் பண்ணின மனிதர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள். சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்" (அப். 9 :1-9) மேலே விவரித்த காட்சியிலிருந்து

ஒரு கணம் கூட தாமதியாமல் திடீரென சவுல் வெளியேறுகிறான். யூதர்கள் மத்தியிலே தனது கௌரவத்தை நிலைநாட்ட அவன் கடினமாக உழைத்திருக்கிறான். எருசலேமில், யூதத்தலைவர்களின் மத்தியில் செல்வாக்குள்ளவனாக வேண்டும் என்னும் ஒரே குறிக்கோளை மனதில் கொண்டு அவன் வாழ் நாட்களைக் கழித்திருக்கிறான். கிறிஸ்தவம் தோன்றியபோது, தேவனுக்கு ஊழியஞ்செய்ய (இறைவனைப் பழிப்போரைத் தடுத்து நிறுத்த) ஒரு சந்தர்ப்பம் வந்துள்ளதை சவுல் கண்டான். இதன் மூலம் தனது செல்வாக்கையும் அதிகப்படுத்திக்கொள்ளலாமே! (யூதர்களிடம் தனக்கு ஒரு பெயரை சம்பாதிக்க முடியுமே) ஆனால், தமஸ்குப் பட்டணத்துக்குச் செல்லும் சாலையிலே, சவுல் பார்வையை பறிகொடுத்த நேரத்திலே, இவை யாவும் மாறிவிட்டன. குருடாயிருக்கும் போது அவனுடைய வாழ்க்கையையும் அவனது ஆசைகளையும் தெளிவாகக் கண்டான். குருடாயிருக்கையில், முன்பு ஒரு போதும் காணாத விதத்தில் அவன் கண்டான்.

## இயேசுவே கிறிஸ்து என அவன் கண்டான்

"நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்பதே இயேசு அவனிடம் கூறிய வார்த்தைகள். இந்த புது மதம் பரவுவதைத் தடுக்க சவுல் மிகக் கடினமாக உழைத்திருக்கிறான். இந்த இயேசுவே வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்ற கருத்தை அவனால் உடனே ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் இறுதியாக, அந்த இயேசுவே கிறிஸ்து என்பதை அந்த நாளில் சவுல் உணர்ந்து கொண்டான். இதைப் புரிந்து கொண்ட அந்த வேளையில் சவுல் எவ்வளவு அதிர்ச்சியுற்றிருப்பான் என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடியும். அவன் வாழ்வு திசை மாறிப்போனதை அப்போது கண்டான். சபையைத் துன்பப்படுத்தும் அவனுடைய சகல முயற்சிகளும் பாவச் செயல்கள் என்பதை அவன் கண்டான். மேசியாவைப் பற்றிய அவனுடைய கருத்து தவறு என்பதைக் கண்டான். அவன் குருடாக இருக்கும் போது, இயேசுவே கிறிஸ்து என்பதைக் தெளிவாக சவுல் கண்டான்.

தான் யார் என உரிமை கொண்டாடும் அவரே இயேசு என்பதை இன்று உணரும்போது பலர் அதிர்ச்சி அடைவார்கள். இயேசுவைப் பற்றி நிறைய பேசப்படுகிறது. அவரைப் பற்றி பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. திட்டுவதற்கும், சத்தியம் செய்யவும் அவருடைய நாமம் பலரால் பயன்படுத்தப்படுகிறது. இப்படியான பலமக்கள் (சவுலைப் போல) இயேசு ஒரு மோசடிக்காரன் அல்ல. உண்மையிலேயே அவர் தேவனுடைய குமாரன் எனத் தெரியும்போது அதிர்ச்சி அடைவர்.

சவுலைப் போலவே, இந்த நவீன கால கொள்கை புரட்டர்கள் இயேசு என தாங்கள் யாரை ஏற்றுக் கொண்டுள்ளனரோ அவரே

கிறிஸ்து என அறியும்போது வாய் அடைத்துப் போவார்கள். இயேசு என வெகு அலட்சியமாக இவர்களால் பேசப்படுபவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். எந்த இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள இவர்களுக்கு அக்கறையும் நேரமும் இல்லையோ அவரே ஜீவனுள்ள தேவனின் குமாரனாவார்.

## இயேசுவும் சபையும் ஒன்றே என அவன் கண்டான்

சபையை அழித்துப்போட கங்கணம் கட்டிக்கொண்டு சவுல் புறப்பட்டான். ஆண்களையும் பெண்களையும் சிறைபிடிக்கும் அதிகாரமுள்ள கடிதங்கள் அவனிடமிருந்தன. சவுலிடம் இயேசு பேசும் போது, "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றார். இயேசுவின் மக்களைத் துன்பப்படுத்தினால் இயேசுவையே துன்புறுத்துவதாக சவுல் உணர்ந்து கொண்டான். இயேசுவும் அவருடைய சபையும் ஒன்றே என்பதை அவன் கண்டான். சபைக்கு சவுல் எதைச் செய்தானோ அதை இயேசுவுக்கே செய்தான், இயேசுவுக்கு என்ன செய்தானோ அதை சபைக்குச் செய்தான்.

இன்னுமாக, இந்த உண்மை இன்று மக்களை வியப்படைய வைக்கும். இயேசுவையும் அவருடைய இரட்சிக்கும் கருணையையும் பல மக்கள் விரும்புகின்றனர். இருந்த போதிலும், சபை முக்கியமல்ல, அது தேவையற்றது என்பது போல அதே மக்கள் அடிக்கடி தங்கள் பேச்சாலும் செயலாலும் காட்டிக் கொள்ளுகின்றனர். "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்". (எபே 1 : 22 - 23) இயேசு சபையின் தலைவர். சபை அவரது சரீரம். கிறிஸ்துவால் நிரப்பப்பட்டது சபை. மனித செல்வாக்கில் நடைபெறும் ஊழல் நிறைந்த ஒரு நிறுவனமே சபை என சிலர் கிண்டல் பேசுகின்றனர். இப்படிப்பட்ட மக்களுக்கு தேவன் தேவை, ஆனால் சபை தேவையற்ற ஒன்று. ஆனால் சபையும் இயேசுவும் ஒன்றே என சவுல் இவர்களிடம் கூறுவான். இயேசு கிறிஸ்துவின் சபையைக் புறக்கணிப்பது, கிறிஸ்துவைப் புறக்கணிப்பதாகும்.

இன்னும் பலர் சபையின் அவசியத்தை ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் எதைப் பொருட்படுத்தாமல் அலட்சியப்படுத்துகின்றனர். ஒரு நாள் ஆராதனைக்கு அவர்கள் வருவது வெகு அபூர்வம். சபை வளர்ச்சிக்குக் கொடுப்பது அவர்களுக்கு மிகவும் கசப்பான ஒரு காரியம். சபைப் பணிகள் எதிலும் பங்கு கொள்ளுவதில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் சபையில் திருமணம் செய்வதும், சபைக்குச் சொந்தமான கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதும் தான். அது மட்டுமல்ல, அவர்களுடைய பிள்ளைகள் கூட சபையில் முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டும். மத சம்பந்தப்பட்ட வெளிப்படையான அனைத்து உறவுகளையும்

இயேசுவுடன் வைத்துக்கொள்ள விரும்பும் அவர்கள், கிறிஸ்துவின் மக்களை, இயேசுவின் சரீரத்தை, அவருடைய சபையை புறக்கணிப்பதால் கிறிஸ்துவைப் புறக்கணிக்கின்றனர்.

மீண்டும் சிலர், சபையில் தீவிரமாக செயலாற்றுபவர்கள். இராஜ்ஜியத்தின் காரியத்திற்காக உழைப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தில், திடமான திட்டங்களைத் தீட்டுவதும், பிற சகோதர, சகோதரிகளுக்கு 'சோம்பேறி' பட்டங்களை அளிப்பதும், ஒத்துப்போக முடியாதவர்களிடம் மல்லுக்கு நிற்பதும் இவர்களின் குணங்கள். சவுலைப் போல, பிற இடங்களுக்கும் சபைகளுக்கும் அடிக்கடி சென்று, அங்கே அவர்களுக்குப் பிடிக்காதவற்றை அல்லது அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை குழப்பி விடுவது இவர்கள் குணம். ஆனால், மீண்டுமாக, தேவனுடைய பிள்ளைகளைத் (ஒருவராக இருப்பினும் கூட) தாக்குவதின் மூலம், கிறிஸ்துவையே அவர்கள் தாக்குகின்றனர் என்பதை உணரத்தவறி விடுகின்றனர். சவுலுக்கு மூன்று நாட்கள் உண்ணவோ, குடிக்கவோ முடியவில்லை. அவனுடைய குற்றங்கள் எண்ணற்றவைகளாக இருந்திருக்க வேண்டும். சவுல் குருடனாக இருந்தபோது எதைக் கண்டானோ அதை மட்டும் இன்று பலர் காண முடிந்தால் அவர்களுடைய பசியே பறந்து போயிருக்கும். இயேசுவின் மக்களுக்குத் தீங்கிழைக்கும் போது இயேசுவுக்கே தீங்கு செய்கிறோம்.

## அவன் ஒரு பாவி என்பதை அவன் கண்டான்

யூதர்களின் மத்தியின் தனது நிலை உயர்வு பற்றிய கனவை சவுல் எண்ணிப் பார்த்தபோது, தேவனோடு அவன் ஒப்புரவாக இருப்பதாக அவன் திருப்தியடைந்திருந்தான். தேவன் விரும்புவதையே தான் செய்வதாக நம்பிக்கொண்டு, கிறிஸ்துவின் பணிகளுக்கு இடையூறு விளைவித்தான். அந்த புழுதி படிந்த சாலையில் அவன் இயேசுவைக் கண்டபோது, அதுவரை அவன் ஒப்புரவாக இருப்பதாக அவன் திருப்தியடைந்திருந்தான். தேவன் விரும்புவதையே தான் செய்வதாக நம்பிக்கொண்டு, கிறிஸ்துவின் பணிகளுக்கு இடையூறு விளைவித்தான். அந்த புழுதி படிந்த சாலையில் அவன் இயேசுவைக் கண்டபோது, அதுவரை அவன் தவறில் உழன்று கொண்டிருந்ததை உணர்ந்ததால் சவுல் தரையில் குப்புற விழுந்தான், குருடனானான், சாப்பிடவோ குடிக்கவோ முடியவில்லை. சந்தேகமில்லை, குவிந்து கிடந்த அவனது குற்றங்களே அதற்குக் காரணமாக இருந்தது. கர்த்தரோடு சரியான பாதையில் நடந்து கொண்டிருப்பதாக எண்ணி திருப்தியாக தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த ஒரு மனிதன், தான் உண்மையில் தேவனுக்கு மாறான பாதையில் நடக்கும் ஒரு பாவி எனக் கண்டு பிடிக்கும் போது, அவனுடைய கால்கள் இடறிப்போயிருக்கும். தனது வாழ்க்கையில் முதல் முறையாக,

தேவனை தான் அறியவில்லை என்பதை நிச்சயப்படுத்தும்போது, அது அவனை தரையில் வீழ்த்திற்று.

இப்படிப்பட்ட மக்கள் பலர் உண்டு. தங்களை மிகவும் நல்லவர்கள் என எண்ணிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தேவன் அன்பானவர், யாரையுமே அவர் தண்டிக்க மாட்டார், குறைந்தபட்சம் தங்களைப் போன்ற ஒரு நல்ல மனிதனை நிச்சயமாக தண்டிக்கவே மாட்டார் என அவர்கள் நம்புகின்றனர். ஆனால் இந்த மாதிரி நிலை, பாவத்தின் ஆழத்தையும் ஆபத்தையும் அறிய முடியாமல் செய்து விடுகிறது. "எல்லாரும் பாவஞ் செய்து தேவமகிமையற்றவர்களாயினர்" (ரோ 3 : 23) நாம் யாவருமே பாவஞ் செய்துள்ளோம். நமது வாழ்க்கையைப் பற்றி நாம் என்ன நினைத்துக் கொண்ட போதிலும், நாம் எல்லாருமே தேவனுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளோம். இயேசுவை தேவனுடைய குமாரன் என நாம் காணும்போது, நாம் பாவிகள் என்பதை உணருகிறோம். தேவனுடன் ஒப்புரவாக நடக்காத நாம், வீழ்ந்து போகிறோம். இத்தகைய உணர்வு சவுலை நிலை குலையச் செய்தது. உங்களையும் அது நிலைகுலைய வைக்கலாம். குருடனாக இருந்தபோது தான், தனது வாழ்வில் முதல் முறையாக, சவுல் தன்னைத்தானே தெளிவாகக் கண்டான்.

## தான் சில காரியங்களைச் செய்யவேண்டுமென அவன் கண்டான்

" தமஸ்கு பட்டணத்துக்குப்போ; நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என சவுலுக்கு இயேசு கூறினார். சவுல் தரையிலிருந்து எழுந்தான். கைலாகு கொடுத்து அவனை நகரத்திற்கு அழைத்துச் சென்றனர். பின்னர் அனனியா என்னும் பேருடையவன் சவுலிடம் வந்தான். அனனியா கூறினான். "நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்து கொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனிதருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22 : 14 - 16) இயேசுவை சவுல் நேரில் பார்த்திருந்தான். அவன் பிரயாணமாகப் போகையில், "தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்" இருந்த போதிலும், இரட்சிக்கப்பட அவன் இன்னும் அதிகமாக செய்ய வேண்டியதிருந்தது. மூன்று நாட்களுக்குப் பின்னர் ஒரு பிரசங்கி அவனிடம் வருகிறான்; அவனுக்குத் தேவனுடைய திட்டங்களைக் கூறுகிறான். பின்னர் திருமுழுக்குப் பெற அவனைக் கேட்டுக்கொள்ளுகிறான். தான் இரட்சிக்கப்பட சில காரியங்களை செய்யத் தேவை என்பதை சவுல் கண்டான்.

'இயேசுவுடன் ஒரு சொந்த அனுபவம்' மட்டும் இரட்சிப்புக்கு போதும், வேறு எதுவும் தேவையில்லையென்று பல மக்கள் இன்று நம்புகிறார்கள். ஆனால் இந்த "அனுபவம்" சவுலுக்கு வேலை செய்யவில்லை. சவுல் இயேசுவுடன் பேசினான். இயேசு யார் என்பதை சவுல் உணர்ந்தான். இரட்சிப்பு தனக்குத் தேவை என்பதை சவுல் கண்டான். என்ற போதிலும், இன்னும் அவனுடைய பாவங்கள் கழுவப்பட வேண்டியதிருந்தது. இரட்சகரின்மேல் மக்கள் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதால் மட்டும் இரட்சிப்பை அவர்கள் அடைய முடியாது. சவுலைப்போல, என்ன செய்ய வேண்டும் என அவர்களுக்குச் சொல்லப்படவேண்டும். அவர்களும் "எழுந்து, பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப்பெற வேண்டும்" சவுல் குருடாயிருந்தான் என்றாலும், அவன் இரட்சிப்படைய இயேசுவின் பேரில் அவனுக்குள்ள விசுவாசத்திற்கும் கூடுதலாக ஒன்று தேவைப்பட்டதை அவன் கண்டான். திருமுழுக்குப் பெற வேண்டிய தேவை அவனுக்கு இருந்தது.

## கண்பார்வை இழக்கக் காத்திருக்க வேண்டாம்.

தேவனுடைய செய்திக்கு நாம் திறந்த மனதுள்ளவர்களாக இருக்க வேண்டியதின் அவசியத்தை, சவுலின் மனந்திரும்புதல் நிகழ்ச்சி நமக்கு நினைவூட்டுகிறது. நாம் யாராக இருப்பினும், அல்லது தேவனுக்கு எவ்வளவு காலம் ஊழியஞ்செய்திருப்பினும், இன்னும் நிறைய நாம் கற்றுக் கொள்ளவும், நிறைய தெரிந்து கொள்ளவும் முடியும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருவேளை (சவுலைப் போல) முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் தேவனிடம் சரணடைய வேண்டியதிருக்கும். சவுல் குருடாகப் போகும் வரை, இவை எதையும் காணவில்லை. அவன் குருடாக இருக்கும் போது தான், இதற்கு முன்பு ஒரு போதும் காணாதக் காரியங்களைக் கண்டான். இயேசுவை தேவனுடைய குமாரனாக அவன் கண்டான். இயேசுவும் சபையும் ஒன்றே என்பதை அவன் கண்டான். தன்னைத்தானே ஒரு பாவி என அவன் கண்டான். இரட்சிக்கப்பட இக்காரியங்களைச் செய்ய வேண்டியது அவசியம் என அவன் கண்டான். ஆனால், உங்கள் வாழ்க்கையில், மிகத் தெளிவாகக் காணும் பொருட்டு, நீங்கள் குருடாகப் போகக் காத்திருக்க வேண்டாம். தேவன் எவைகளைக் கட்டளையிட்டுள்ளாரோ அவைகளை இன்று செய்யுங்கள்.

**DAVID THURMAN** — **டேவிட் துர்மன்.**

# எது போதிக்கப்பட வேண்டும்

சரீரத்துக்குரிய காரியங்களையே கொண்டிருக்கிற இந்த உலகத்தில் அநேகர் போதனை என்கிற செயலில் இறங்கியிருக்கிறார்கள். தேவனை அறியாத மற்றும் சுயநலமிக்க இந்த உலகத்தில் இந்த செயல் முரண்பாடாக இருக்கின்றது. கவர்ச்சிமிக்க வியாபாரத்திலே அநேகர் உழன்று கொண்டிருக்கிறார்கள். மேலும் அதிக நேரத்தை அதற்கே செலவழிக்கிறார்கள்.

இருப்பினும் தங்களுடைய மதக்காரியங்களை உலகத்திற்கு பிரசங்கிக்க ஒருசிலர் கடுமையாக உழைக்கிறார்கள். தேவனை ஒரு சிலர் கண்டுகொண்டிருக்கிறார்கள், என்கிற காரியத்தை அறிந்து கொள்ளுகிறது ஆறுதலாகவும் இருக்கிறது. இருப்பினும் அவர்கள் போதிக்கக்கூடிய காரியத்தில் சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.

எவை போதிக்கப்படவேண்டுமோ அவை போதிக்கப்படுகிற தில்லை. வெறுமையான தத்துவங்களையும், பெரிய கூட்டங்களை கவரக்கூடிய அசுத்தமான காரியங்களையும் அநேகர் போதிக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய கொள்கைகளை அறிந்தும், அறியாமலும் மற்றவர்களுக்கு போதிக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுலும், அவருடைய நண்பர்களும் போதித்த விசுவாசத்தின் வார்த்தையையே நாம் போதிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். காலத்தால் அழியாத தேவனுடைய சத்தியங்கள் பரலோகத்திலிருந்து நமக்கு தீர்க்கதரிசிகளின் மூலமாக கொடுக்கப்பட்டு 'தேவனுடைய வாக்கியங்கள்' (ரோ : 3 : 2) பவுல் அறிவிக்கின்ற வசனங்கள் நமக்காக புத்தக வடிவில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்படுகின்ற சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தையே நாம் போதிக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும் (யாக் : 1 : 25) ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் . . . ." என்று பேதுரு நமக்கு ஆலோசனை கூறுகிறார் ( 1 பேதுரு : 4 : 11)

தாங்கள் போதிக்கக்கூடிய காரியங்கள் தேவனுடைய வார்த்தையை சார்ந்து இருக்கின்றதா என்று பிரசங்கிகள் உறுதிபடுத்த வேண்டும். கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு என்ன கட்டளையிட்டாரோ அதையே நாம் அறிந்து கொண்டு அவருடைய அதிகாரத்தின் பேரில் நாம் மற்றவர்களுக்கு போதித்து கற்றுக் கொடுக்க வேண்டும். (மத் : 28 : 20)

நீங்கள் எதை போதித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**தமிழில் : பேங்க்ரஸ்.**

# தேவனை உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் தேவனை அறிவீர்களா? தேவனை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா என்று நான் கேட்கவில்லை. நீங்கள் தேவனை அறிவீர்களா? நீங்கள் ஜெபிக்கிறீர்களா என நான் கேட்கவில்லை. நீங்கள் தேவனை அறிவீர்களா? உங்கள் வேதாகமத்தை நீங்கள் படிக்கிறீர்களா என நான் உங்களைக் கேட்கவில்லை. நீங்கள் தேவனை அறிவீர்களா? அதாவது, நீங்கள் உண்மையிலேயே தேவனை அறிவீர்களா? ஒரு வித்தியாசமான கேள்வியாக இதை நீங்கள் நினைக்கலாம். நான் தேவனை எவ்வாறு அறிய முடியும்? அவர் காணப்படாத ஒரு ஆவி ஆயிற்றே; நானோ இரத்தமும் சதையும் கொண்ட சரீரத்தை உடைய சாதாரண மனிதன் தானே. நான் தேவனை எவ்வாறு அறிய முடியும்? அவர் எல்லாம் வல்ல இறைவன்; நான் வெறும் மனிதன். நான் எவ்வாறு அவரை அறிய முடியும்? அவரோ பரிசுத்தர், நான் மா பாவி. ஆனால், தேவன் நீங்கள் அறிய முடியும் என வேதாகமம் கூறுகிறது. அவரை நீங்கள் அறிவது மட்டுமல்லாமல், அவரை நீங்கள் அறிந்து கொள்ளுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் முடியும். "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம்" (1 யோவான் 2 : 3)

## முதலாவதாக, இயற்கை வழியாக நாம் தேவனை அறியலாம் :-

இயற்கை அற்புதமானது. அழகு மிக்க ஆகாயம், விண்மீன்கள், தாவரவர்க்கங்கள், மிருக ஜீவன்கள், மனித உடல் ஆகிய யாவும் நம்மை தேவனை நோக்கித் திருப்புகின்றன. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது". (சங் 19 : 1) வாழ்க்கையைப் பற்றியும், தாவரங்களைப் பற்றியும், மிருகங்களைப் பற்றியும், மனிதர்களைப் பற்றியும் மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் வியப்பூட்டும் விஷயங்கள் பலவற்றை நமக்கு விளக்கிச் சொல்லக் கூடும் என்றபோதிலும், இறுதியாக இம்மக்கள் தங்களைவிட மகத்தானதும், ஞானமும் மிகவும் வல்லமையுள்ளதுமான ஒரு மாபெரும் சக்தியை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்த சக்தியே தேவன்! ஒரு சிறு விதைக்கு உயிர்தந்து, பெரியதோர் மரமாக அதை ஆக்கும் சக்தியாது? தேவன் அல்லவா? இப்பூமியின் சகல செயல்பாடுகளையும் ஞானத்துடனும் வல்லமையுடனும் நடத்தி வரும் பெரிய சக்தி தேவனே. இயற்கை, தேவனைச் சுட்டிக்காட்டும் ஒரு அற்புதமான வழி.

என்றாலும், தேவனைப் பற்றி ஒரு சில காரியங்களை மட்டுமே இயற்கை கூறுகிறது. நமது வாழ்வு பற்றிய தேவனின் விருப்பத்தை இயற்கை நமக்குச் சொல்லப் போவதில்லை. மனித இரட்சிப்புக்கேற்ற தேவனின் திட்டத்தையோ, அல்லது தேவனை ஆராதிக்கும் முறை பற்றியோ அது சொல்லாது. இயற்கை வழியாக தேவனிடம் நெருங்கி வர அல்லது தங்கள் சொந்த உள்ளத்தையும், ஆன்மாவையும் ஒருநிலைப்படுத்தி, மாயமான முறையில் அவரை நெருங்க பலர் முயன்று வருகின்றனர். ஒருவன் தன்னுடைய மனதை அறிந்து கொள்வதோ அல்லது தேவனின் படைப்பை அறிந்து கொள்வதோ, தேவனை அறிந்து கொள்ளுவதற்கு ஒப்பாகாது. நீங்கள் தேவனை அறிவீர்களா? ரோமர் 1 : 19 , 20 வசனங்களில் நாம் படிக்கிறோம்.

1. தேவன் தம்மைத்தாமே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்; 2. தான் உண்டாக்கிய பொருட்கள் மூலமாக அவர் தம்மை வெளிப்படுத்துகிறார், 3. தேவன் அழியாத வல்லமையுள்ளவரென்றும், அவர் தெய்வம் என்றும், அவருடைய படைப்புகளிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளமுடியும்; 4. இயற்கை வழியாக தேவனைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியால், அவரை விசுவாசியாமல் இருக்க எந்த நொண்டிச் சாக்கும் எடுபடாது. "தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியெனில், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலக முண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள்போக்குச்சொல்லஇடமில்லை" (ரோ.1 : 19, 20).

தேவனை அறிய இயற்கை நமக்கு உதவுகிறது. ஆனால் இயற்கை மூலமாக தேவனைப் பற்றி ஒரு சில காரியங்களை மட்டுமே நாம் அறியக் கூடும்.

## இரண்டாவதாக, தேவனுடைய குமாரன் இயேசு வழியாக நாம் அவரை அறியக்கூடும்:-

வேதாகமத்தின் தேவனைப் பற்றி பல மதவாதிகளும், மற்றோரும் தவறானக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். தேவனை ஒரு மெலிந்த வயதான மனிதர் என சிலர் நினைக்கின்றனர். இன்னும் சிலர் அவரை ஒரு அற்பமான, வெறுக்கத்தக்க தேவன் என எண்ணுகின்றனர். பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு நாம் முதலில் சிருஷ்டிப்பில் அறிமுகப்படுத்தப்படுகிறோம். அவருடைய வல்லமையைப் பற்றி அங்கே நாம் தெரிந்து கொள்ளுகிறோம். அடுத்து, பாவஞ்செய்த காரணத்தால் ஆதாம், ஏவாளை, ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டுகிற தேவனை நாம் சந்திக்கிறோம். அங்கே அவருடைய நீதியை நாம் படிக்கிறோம். பின்னர், உலகத்தை ஒரு ஜலப்பிரளயத்தால் தேவன் அழிக்கிறார். இப்போது அவருடைய பழிவாங்குதலையும்

கோபத்தையும் நாம் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டை படிக்க தொடங்குகையில், நாம் இயேசுவை சந்திக்கிறோம். பலவேளைகளில், இயேசுவை அன்பு, சமாதானம், கருணை நிறைந்தவர் என்று மட்டுமே நாம் எண்ணுகிறோம். பெண்களோடும், குழந்தைகளோடும் அவர் பேசிக் கொண்டிருப்பதை நாம் நினைவு கூறுகிறோம். அவருடைய அற்புதச் செயல்கள் அவருடைய கருணையின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றன. ஆனால் . . . . பொறுங்கள்! பழிவாங்குதல், கோபம், நீதி இவைகளே தேவனைப் பற்றிய உங்கள் கருத்துக்களாக இருந்தால் அதே சமயத்தில் அன்பு, இரக்கம், கருணை மட்டுமே இயேசு என்றும் நீங்கள் எண்ணினால் நீங்கள் யோவான் 1 : 1 -3 வசனங்களையும், 14 : 8 -9 வசனங்களையும் படிக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். "என்னைக் கண்டவர் பிதாவைக் கண்டான்" என்றும், "அந்த வார்த்தை (இயேசு) தேவனாயிருந்தது" என்றும் இயேசுவும், எழுத்தர் யோவானும் நமக்குச் சொல்லுகிறார்கள். இயேசுவை நீங்கள் அறிந்தால், தேவனை அறிய முடியும். அவர்கள் ஒன்றே. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை . . . தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோ. 3 : 16) நம்மை நேசிப்பவர் இயேசு ஒருவர் மட்டும் அல்ல; தேவனும் நம்மை நேசிக்கிறார். கோபம், பழிவாங்கல், நீதி செலுத்துதல் ஆகியவற்றை இயேசுவும் காட்டுகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ". . . . . . . நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான். 12 : 48) என இயேசு கூறினார். இயேசுவை தெரிந்து கொள்ளுவது, தேவனைத் தெரிந்து கொள்ளுவது போல.

இயேசுவை அறிந்து கொள்ளுவதில் மூலம் நீங்கள் தேவனை அறிந்து கொள்ளலாம். தேவனுடைய வார்த்தையின் வழியாக மட்டுமே நீங்கள் இயேசுவை அறிந்து கொள்ள முடியும். 2 பேதுரு 1 : 3 வசனத்தையும் 3 : 18 வசனத்தையும் படித்துப் பாருங்கள். படிப்பதாலும், கீழ்ப்படிவதாலும் மட்டுமே நீங்கள் வசனத்தை அறிந்து கொள்ள முடியும். நீங்கள் தேவனை அறிவீர்களா?

## மூன்றாவதாக, தேவனுக்குக் கீழ்ப்படிவதால் அவரை அறிய முடியும்:-

"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம்" ( 1 யோவான். 2 : 3 ) நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவது நிச்சயமாக இருப்பின், அதுவே நீங்கள் தேவனை நிச்சயமாக அறியும் இறுதி வழியாகும்.

தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவரை அறிவதாகும். மற்றவர்களை விட ஒரு சில பேரை மட்டும் நாம் எல்லாரும் நன்றாக அறிந்திருப்போம். சிலரை மிகவும் நெருக்கமாக அறிந்திருப்போம். தேவனை எவ்வளவு நெருக்கமாக நீங்கள் அறிவீர்கள்? இயேசுவின்

வழியாக தேவனை நாம் வேதாகமத்தில் அறிந்து கொள்ளுகிறோம். அவருடைய இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படியும் போது, அவரை மேலும் நன்றாக அறிகிறோம். (மாற்கு 16 : 16) அப். 2 : 38 ரோமர் 6 : 3 -4). தேவனை அறிந்து, அவருக்குக் கீழ்ப்படியும் போது, அவரை மிகவும் நெருக்கமாக தொடர்ந்து அறிகிறோம். நீங்கள் எவ்வளவு நன்கு தேவனை அறிவீர்கள்? நீங்கள் அவரை முதலில் சந்தித்ததைவிட, இப்போது நன்கு அறிவீர்களா? ஒரு கிறிஸ்தவனாக வளர்ச்சி அடைவது குறித்து, சுவிசேஷம் நிறையக் கூறுகிறது. (2 பேதுரு 3 : 18, 1பேதுரு 2 : 1 -2, 1கொரி 3 : 13 எபி 5 : 12 - 4) உண்மையிலேயே தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இயற்கையைக் கண்டு தேவனைப் பற்றி நாம் சில காரியங்களை தெரிந்து கொள்ள முடியும். ஆனால் நாம் அறிய வேண்டிய எல்லாவற்றையும் அறிய இயலாது. தேவனைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் இயேசுவைத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வசனத்தால் மட்டுமே நீங்கள் இயேசுவை அறிய முடியும். இயேசுவை அறிந்து கொள்ள, அவரை நேசிக்க வேண்டும். நீங்கள் அவரை நேசித்தால், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவீர்கள். (யோவான். 14 : 15)

தேவனை நீங்கள் சந்திக்கும்போது அவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! அவருடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு, அதற்குக்கீழ்ப்படிவதின் மூலம் அவரை நெருக்கமாக அறிந்து கொள்வீர்களாக!

**Mark Bird** தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.

## கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவு பற்றி

**பயப்படாதே, உன்னை மீட்டுக் கொண்டேன் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன் (ஏசா. 43 : 1**

**நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன். (l கொரி. 11 : 2**

**நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்து கிறிஸ்து என்னும் வேறொருடையவர்களாகி, தேவனுக்கென்று கனி கொடுக்கிறவர்களானீர்கள் (ரோமர். 7 : 4**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, DEC 1994
Dec 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST